பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 01 திங்கட்கிழமை 18.10.2021 கதிர் 210

## விபத்தில் மாணவன் பரிதாப உயிரிழப்பு!

வவுனியா, உலுக்குளம் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் 16 வயதான பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை உலுக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறித்த மாணவன் கட்டுப்பாட்டை இழந்து மற்றொரு மோட்டார் சைக்கிளில் ☞2





# விவசாயிகளின் பிரச்சினைக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் மாபெரும் போராட்டங்கள்

### கமநல சேவை நிலையங்கள் முன்பாகப் பலர் அணிதிரள்வு

உரத் தட்டுப்பாடு உள்ளிட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் தற்காலப் பிரச்சினைகளுக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் இன்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

'உரமின்றி உழவில்லை' என்ற தொனிப்பொருளில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள கமநலசேவைநிலையங்கள் முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன. ☞2








## விவசாயிகளின் போராட்டங்கள்: பின்னணியில் ஜே.வி.பியினரே!

### அமைச்சர் மஹிந்தானந்த குற்றச்சாட்டு



விவசாயிகளின் போராட்டங்களின் பின்னணியில் ஜே.வி.பியியே செயற்படுகின்றது என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டு மக்களைக் காக்கவே இயற்கை ☞2

## இரு நாட்டுத் தமிழர்களை மோதச் செய்யவா டக்ளஸுக்கு கடற்றொழில் அமைச்சுப் பதவி?

### யாழில் வைத்து மனோ எம்.பி. கேள்விக்கணை



(ந.லோகதயாளன்)

கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவை நியமித்ததிலும் சதி உள்ளதோ தெரியாது. இரு நாட்டுத் தமிழர்களும் மோதி விரோத மனத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் டக்ளஸுக்குக் கடற்றொழில் அமைச்சை ராஜபக்ஷக்கள் வழங்கினார்களோ என்று தெரியாது.

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ☞2

## டிப்பர் மோதி சிறுவன் சாவு

வவுனியா, செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியில் இன்று மாலை டிப்பர் - மோட்டர் சைக்கிள் ☞2



## ஒக். 21 பாடசாலைகளுக்கு நாம் செல்லவே மாட்டோம்!

### ஆசிரியர் சங்கங்கள் அறிவிப்பு

ஒக்ரோபர் 21ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்பட்டாலும் தாம் பாடசாலைகளுக்குச் செல்லமாட்டோம் என்று இலங்கை அதிபர் ஆசிரியர் சங்கங்களின் கூட்டணி அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமையால் கடந்த மே மாதம் முதல் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், ஒக்ரோபர் 21ஆம் திகதி தொடக்கம் பாடசாலைகளைக் கட்டம் கட்டமாகத் திறப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மீளத் ☞2

## ரயில் மோதி 20 பசு மாடுகள் துடிதுடித்துப் பரிதாப மரணம்



(ந.லோகதயாளன்)

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயில் மோதியதில் 20 பசு மாடுகள் சம்பவ இடத்திலேயே துடிதுடித்துப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன. ☞2

### சிறுமி வன்புணர்வு:

## ஒளிப்படப்பிடிப்பாளர் விளக்கமறியலில்!

13 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாநகரில் இயங்கும் ஒளிப்படப்பிடிப்பு நிறுவனத்தின் உரிமையாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பின்னணி தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ☞2

## விவசாயிகளின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தப் போராட்டங்களில் விவசாயிகளுடன்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

உரத்தைத் தடுப்பது ஊழல் செய்யவா?, நாட்டுக்குச் சோறு போடும் கமக்காரர் கரங்களைக் கடிக்காதே!, உரத்தைத் தடுத்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே!, உரமின்றி உழவில்லை; உழவின்றி உணவில்லை; உணவின்றி உலகில்லை, நாட்டுக்குச் சோறு போடும் கமக்காரர் கருத்துக்கு மதிப்பளி, உரமில்லா நாற்றும் டொலரில்லா நாடும் எதற்கு? எனப் பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## விபத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயணித்த நபருடன் மோதி, வீதியால் பயணித்துக்கொண்டிருந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மாணவன் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

உலுக்குளம் பகுதியை சேர்ந்த ஹன்சா டில்சான் மிகிரிங்க (வயது - 16) என்ற சிரசுமன மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவனே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக உலுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஒக் - 21 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திறக்கப்படவுள்ளன.

இந்நிலையில், தமது சம்பள முரண்பாட்டு பிரச்சனை தொடர்பில் மூன்று மாதங்களுக்கும்மேலாக தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அதிபர், ஆசிரியர் சங்கங்கள் அன்றைய தினத்தில் பாடசாலைகளுக்குச் செல்லாதிருக்க தீர்மானம் மேற்கொண்டுள்ளன.

இது தொடர்பில் கொழும்பில் இன்று ஊடக சந்திப்பொன்றை நடத்திய அதிபர் - ஆசிரியர் சங்கங்களின் கூட்டணி, பாடசாலைகள் திறக்கப்பட்டாலும் எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் தமது போராட்டத்தைத் தொடருவோம் என்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் 25ஆம் திகதி பாடசாலைக்குச் சென்று கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்றும், தமது கோரிக்கைகள் தீர்க்கப்படும் வரையில் அரசுக்கான தமது அழுத்தங்களைத் தொடர்ந்தும் வழங்குவோம் என்றும் அந்தக் கூட்டணி தெரிவித்துள்ளது.

## ரயில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிளிநொச்சியில் இருந்து இன்று காலை 10.30 மணிக்கு யாழ். நோக்கிப் பயணித்த பரீட்சார்த்த ரயில் மோதியதிலேயே இந்த 20 பசு மாடுகளும் உயிரிழந்துள்ளன.

யாழ், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனி ஒருவருக்குச் சொந்தமான குறித்த மாடுகள், மேய்ச்சலுக்காகப் பிறிதொரு இடத்துக்குச் சென்ற வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## டிப்பர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மோதி விபத்துக்குள்ளானதில் 15 வயது சிறுவன் மரணமடைந்துள்ளான் என பொலி ஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டர் சைக் கிளில் பயணித்த செட்டிகுளம், முகத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த ஆ.சயந்தன் (வயது-15) என்ற சிறுவன் மரணமடைந்துள்ளான். விபத்து தொடர்பில் டிப்பர் சாரதி செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார், மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## இரு நாட்டு.......

மனோ கணேசன் தெரிவித்தார்.

யாழ்., திண்ணை விடுதியில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்கு எந்தப் பிரச்சினை வந்தாலும் நான் குரல் கொடுப்பேன். வடக்கு மீனவர்கள் பெரும் துன்பத்தைச் சந்தித்தவர்கள். போரை நாம் விரும்பவில்லை. போரைச் செய்தவர்களிடம் தர்க்க ரீதியிலான கருத்து இருந்தது.

வடக்கு மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். இந்திய மீனவர்கள் 30 வருடங்களாக இலங்கை கடல்வளத்தை பயன்படுத்துகின்றனர். இதானல் இந்தியாவில் தற்போது இலங்கை வளத்தைப் பயன்படுத்திய ஒரு தலைமுறையே உருவாகிவிட்டது.

இந்தியாவில்கூட மாநிலம் மாறி வேறு மாநிலத்தில் மீன்பிடிக்க முடியாத நிலையில் இலங்கை எல்லைக்குள் வருவதும் பிரச்சினைக்குரிய விடயம். இதற்கு இலங்கை மீனவர்களுக்குப் பாரிய கப்பல்களை வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவை நியமித்ததிலும் சதி உள்ளதோ தெரியாது. இரு நாட்டுத் தமிழர்களும்மோதிவிரோத மனத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் டக்ளஸுக்குக் கடற்றொழில் அமைச்சை ராஜ்பக்சக்கள் வழங்கினார்களோ என்று தெரியாது. இதனை வெறும் மீனவர்களின் பிரச்சினையாக மட்டும் பார்க்காமல் தமிழர்களின் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும் என்று அரசியல் தலைவர்களைக்கோரவிரும்புகின்றேன் - என்றார்.

## ஒளிப்படப்பிடிப்பாளர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுத்துள்ளனர்.

ஒளிப்படப்பிடிப்பு நிறுவனத்தின் உரிமையாளரால் எடுக்கப்பட்டன எனக் கூறப்படும் சிறுமியின் சில ஒளிப்படங்களை வெளியிட முயற்சித்த சிலரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குவிலில் 13 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாநகரில் ஒளிப்படப்பிடிப்பு (ஸ்ருடியோ) நடத்துபவர் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டார்.

அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக உறவினரான சந்தேகநபர் பல தடவைகள் தன்னை வன்புணர்ந்ததாக பாதிக்கப்பட்ட சிறுமி வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

பாதிக்கப்பட்ட சிறுமி சட்ட மருத்துவ வல்லுநரின் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சந்தேகநபரின் கீழ் பணியாற்றும் சிலர் சிறுமியின் ஒளிப்படங்களை வைத்திருந்தமை தொடர்பில் கண்டறிந்தனர்.

அந்த ஒளிப்படங்களை சமூக ஊடகங்களில் வெளியிடலாம் என்ற அடிப்படையில் அவற்றை வைத்திருந்தவர்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், சந்தேகநபரின் நடவடிக்கைகள் தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளின் போராட்டங்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விவசாயத்தை நோக்கிப் பயணிப்பதற்கு முயற்சிக்கின்றோம். எனினும், இதற்கு எதிராக உர கம்பனிகளின் தேவைக்கேற்பவே ஜே.வி.பியால் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அப்பாவி விவசாயிகள் வீதியில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

எதிரணியால் முன்னெடுக்கப்படும் இத்தகைய போராட்டத்துக்கு அரச பங்காளிக்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவு வழங்குவது வேதனைக்குரிய விடயமாகும் - என்றார்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

அமெரிக்க லொத்தர் வீசா DV-2023

- அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான வீசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
- 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.
- பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு அவசியம்.
- அமெரிக்க லொத்தர் வீசா சேவையில் கடந்த 22 வருடகாலத்தில் எம்மூடாக விண்ணப்பித்த 1000ற்கு மேற்பட்டவர்கள் தற்போது நிரந்தரமாக அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.
- தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

முடிவுத்திகதி - 09.11.2021



குறிப்பு : இறுதிநேர நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு கடைசிவரை காத்திராது இன்றே விண்ணப்பியுங்கள்.

தொடர்புகளுக்கு
அருள் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
076 4431 576
இல.10, இ.போ.ச பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.
இல.09, அருள் ஜுவல்லறி புதிய மாநகர சபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கரவைக் கண்டிக்கும் கர்தினால்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான தனது கரிசனையைத் திரும்பவும் எதிரொலித்து இருக்கின்றார் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீண்ட நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரு மான ரிஷாத் பதியுதீனை பிணையில் விடுவிக்கும் முடிவை நீதிமன்றம் எடுத்தபோது இதுபோன்ற பிரதிபலிப்பு கர்தி னாலிடமிருந்து வெளிப்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில், அது பயங்கர வாதத் தாக்குதல் என்பதற்கும் அப்பால் மேலும் கண்ணில் படாத பல விடயங்கள் அதில் பொதிந்து உள்ளன என்று கவலை தெரிவித்திருக்கின்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

அது உண்மையாக இருக்கலாம். ஆனாலும் இதுபோன்று, இந்தவிவகாரத்தில் கண்ணுக்குத் தெரியாத விடயங்கள் என்று சந்தேகிக்கப்படும் சில மர்மங்கள் கர்தினாலையும் சூழ்ந்து உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டுவது தவிர்க்க முடியாததாகிறது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதி வேண்டிப் போராடும் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் இந்தப் போக்கிற் கும், இந்த விடயத்தில் மட்டும் அளவுக்கு அதிகமாக நீதி வேண்டி வலியுறுத்தும் அவரின் சீற்றத்துக்கும், அதை யொட்டிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஒற்றைக் காலில் நிற்கும் அவரது நடவடிக்கைக்கும் பின்னாலும் கூட அவர் குறிப்பிடுகின்றமை போன்று கண் ணுக்குத் தெரியாத விடயங்கள் பொதிந்து கிடக்கின்ற னவோ என்று சந்தேகப்பட வேண்டி உள்ளது.

அவர் – கர்தினால் – ஒரு மதத் தலைவர். சமாதான பிரபு இயேசுபிரான் காட்டும் உயரிய வழியைப் பின்பற்றுபவர். கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொடூரத் தாக்குதல்களுக்கு அவர் நியாயம் கேட்டு நிற்கின்றமையும், அதற்காக அவர் தொடர்ந்து வலியுறுத்துகின்றமையும் தவறில்லை. அவர் குறிப்பிடும் அத்தாக்குதலில் கொல் லப்பட்ட மக்கள் சுமார் 270 பேர்தான். காயமுற்றவர்கள் மேலும் சில நூறு பேர்.

ஆனால் தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராக இலங்கைப் படைகள் கண்மூடித்தனமாகத் தொடுத்த யுத்தத்தில் பல்லாயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரம் அப்பாவிகள் படுகாயமுற்று அங்கவீனர்களாயினர். பல் லாயிரம் பேர் உறவுகளை இழந்து ஏதிலிகளாகி இன்னும் அந்தரித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அவையெல்லாம் நடந்தபோது, அச்செயல் களைப் புரிந்த கொடூரவாதிகளுக்கு ஆசீர்வாதம் வழங்கி, கொடூரங்களுக்கு அங்கீகாரம் கொடுத்துக் கொண்டிருந்த மத பீடத்தின் தலைவர்தான் இவர். அப்போது நீதிக்காக வாயையே திறக்காதவர். அப்போது என்ன, இப்போதும் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு நீதி வேண்டும் என்று பகி ரங்கமாகக் கூறும் முதுகுத் தெம்பில்லாதவர். திருப்பீடத்தின் உயரிய கருதினால் சீருடையை அணிந்து கொண்டு, அந்த விடயங்களில் பௌத்த, சிங்களப் பேரினவாதத்துக்கு அஞ்சிப் பதுங்கிக் கொண்டவர்.

அந்த பெரும் கொடூரத்தில் கொல்லப்பட்ட அவரது திருப் பீட மக்களே பல்லாயிரம் பேர் இருக்கும்போது, அவர்களுக் காகவும் நீதி, நியாயம் கேட்பதற்கு இன்னும் கூட வக்கில்லாத ஒரு கர்தினால், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு மட்டும் தனித்து விடாது இப்படி வலியுறுத்தல்களை முன்வைக் கின்றமை அந்த வலிறுத்தல்களுக்குப் பின்னாலும் கண்ணுக்குத் தெரியாத வேறு மறைபொருள் திட்டம் உள்ளது என்ற எண்ணத்தைத் தான் தந்து நிற்கின்றது.

நாம் இப்பத்தியில் முன்னர் கூறியபடி, அப்பாவி மக்க ளுக்குஎதிரானபெரும்கொடூரத்தாக்குதல்கள்விடயங்களை கையாளுவதில் 'ஒரு கண்ணுக்கு வெண்ணெய் தடவ முயலும் கர்தினால், மறு கண்ணுக்கு தாமே முன்னின்று சுண்ணாம்பு திணிக்க முற்படுகின்றார்' என்பதுதான் உண்மை. ஆகையால், இந்த விடயத்தில் அவரின் நடவடிக் கைகள், செயற்பாடுகளுக்கு பின்னாலும் கண்ணுக்குத் தெரியாத விடயங்கள் கரவாய்ப் புதைந்து கிடக்கின்றன என்ற சந்தேகமும் தவிர்க்க முடியாதது தான்.

# கொவிட் சிகிச்சை நிலையங்களை படிப்படியாக குறைப்பதற்கு முடிவு!

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றமையால், கொரோனா சிகிச்சை நிலையங்களைப் படிப் படியாகக் குறைப்பதற்கு அரசு முடிவு செய் துள்ளதாக சுகாதார அமைச்சின் கொரோனா சம்பந்தமான பிரதான இணைப்பாளரும், சுகாதார சேவைகள் தொழில்நுட்ப பிரிவின் பணிப்பாளருமான வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இதன்படி, அந்தச் செயற்பாடுகளில் இருந்து 30 சிகிச்சை மையங்கள் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளன என அவர் கூறியுள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றிடம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கொரோனாநோயாளிகளின்எண்ணிக்கை குறைந்து வருகின்றமையால், படிப்படியாக மீதமுள்ள சிகிச்சை நிலையங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கின்றது. தற்போது சிகிச்சை நிலையங்களில் உள்ள 34 ஆயிரத்து 7 படுக்கைகளில், இதுவரை 19 ஆயிரத்து 660 காலி செய் யப்பட்டுள்ளன.

கொவிட் சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்ட தீவிர சிகிச்சை பிரிவுகளில் சுமார் நாற்பது சதவீத படுக்கைகள் இப்போது வெறுமையாக உள்ளன. கொவிட் நோயாளிகளின் எண் ணிக்கை வியத்தகு அளவில் குறைந்து விட்டது.

நாடும் கொரோனா வைரஸ் சிவப்பு மண் டலத்தில் இருந்து பசுமை மண்டலத்துக்கு நகர்ந்துள்ளது, எனினும், தற்போதைய நிலையைப் பராமரிக்காவிட்டால், அது விரைவில் சிவப்பு மண்டலத்துக்கு மாறி விடும்.

நாட்டைப் பராமரிக்க சில சுகாதாரச் சட்டங்கள் தளர்த்தப்பட்டாலும், மக்கள் அடிப்படை சுகாதாரச் சட்டங்களை தொடர்ந்து கடைப்பிடிக்கின்றமை மிகவும் முக்கியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 2 கோடி ரூபா ஒதுக்கீட்டில் வவுனியாவில் நடைபாதை!

## நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தகவல்

வவுனியாவில் 2 கோடி ரூபா நிதி ஒதுக் கீட்டில் நடைபாதை அமைக்கும் பணிகள் நகரசபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நூறு நகரங்களை அழகு படுத்தும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டத்தின் கீழ் வவுனியா நகரும் உள்ள டக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், முதற்கட்டமாக வவுனியா மணிக்கூண்;டு கோபுர சந்தியில் இருந்து, பொது வைத்தியசாலை சுற்றுவட்டம் வரை யான வீதிக்கரையில் அதனை அமைப்பதற் கான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2 கோடி ரூபா நிதியில் நகரசபையின் மேற் பார்வையில் துரிதமாக இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் தவி சாளர் தெரிவித்துள்ளார்.

# 7 ஆயிரத்துக்கும் அதிக பயணிகள் இரு வாரத்தில் நாட்டுக்கு வருகை

ஒக்ரோபர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் 7 ஆயிரத்துக்கும் அதிக மான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது. கொரோனா பரவல் காரணமாக சரிந்த சுற்றுலாத் துறை இப்போது படிப்படியாக மீண்டு வருகிறது என்று அமைச்சகம் தெரி வித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் மொத்தம் 45 ஆயிரத்து 413 சுற்றுலாப் பய ணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் 7 ஆயிரத்து 96 பேர் ஒக்ரோபர் 01 முதல் ஒக்ரோபர் 13 ஆம் திகதி வரை நாட்டுக்கு வந்துள்ளனர்.

பெரும்பாலான வருகைகள் ஜனவரி முதல் ஒக்ரோபர் வரை இருந்தன. இந்தியா, கஜகஸ்தான், ஜேர்மனி, உக்ரைன், அமெ ரிக்கா, சீனா, கனடா, பிரான்ஸ் மற்றும் ரஷ் யாவைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படு கின்றமையால், அதிக சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவதற்கான போக்கு அதிகரித்து வருவதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நாட் டுக்கு அதிக சுற்றுலா பயணிகளை ஈர்க்கத் தேவையான விளம்பர திட்டங்கள் செயற் படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் கூறினார்.

# பாடசாலை மாணவர்களுக்கு பாலுக்குப் பதிலாகக் கஞ்சி?

*பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவாக வழங்கப்படும் பாலுக்கு பதிலாக கஞ்சி வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.*

*பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்குவதற்குப் பதிலாக உள்நாட்டு அரிசியால் தயாரிக்கப்படும் ஒரு கோப்பை கஞ்சியை வழங்குவதற்கு கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன யோசனை ஒன்றை அமைச்சரவையில் முன்வைத்துள்ளார்.*

*நாட்டில் தெரிவு செய்யப்பட்ட 923 பாடசாலைகளில் சத்துணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையிலான மாணவர்களுக்கு இவ்வாறு சத்துணவு கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*சத்துணவாக வழங்கப்படும் ஒரு கிளாஸ் பாலுக்குப் பதிலாக ஒரு கிளாஸ் கஞ்சி வழங்குமாறு அமைச்சர் பரிந்துரை செய்துள்ளார். இதற்காக ஒரு மாணவருக்காக 23 ரூபா ஒதுக்கீடு செய்ய முன் மொழியப்பட்டுள்ளது.*

# விண்வெளியில் படமாக்கப்பட்ட ரஷ்ய திரைப்படம்




விண்வெளி வீரர்கள் தொடர்பான 'தி சேலஞ்ச்' என்கிற ஆவணப்படம் விரைவில் வெளியாக உள்ளது. ரஷ்ய இயக்குநர் க்லிம் ஷிபெங்கோ தலைமையிலான குழுவினர் இந்த படப்பிடிப்பை நடத்த கடந்த 12 நாட்களாக விண்ணில் உள்ள ஐ.எஸ்.எஸ். சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்துக்கு சென்றுள்ளனர்.

புவியீர்ப்பு விசை இல்லாத விண்வெளியில் ஓர் விண்வெளி வீரருக்கு அவசர இருதய அறுவை சிகிச்சை தேவைப்படும் நிலையில் விண்வெளி செல்லும் ஒரு மருத்துவர் அதனை எவ்வாறு வெற்றிகரமாக செய்து முடிக்கிறார் என்பதே படத்தின் மையக்கரு ஆகும்.

இத்திரைப்படத்தில் இரு ரஷ்ய விண்வெளி வீரர்கள் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளனர். விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவுக்கு கடும் போட்டியாக விளங்குவது ரஷ்யாதான். விண்வெளி சென்று திரும்பி வந்த முதல் ரஷ்ய நாய் லைகா.

முதல் ரஷ்ய விண்வெளி வீரர் யூரி காகரின். முதல் பெண் விண்வெளி வீராங்கனை வேலன்டினா. இதனையடுத்து தொடர்ந்து பரிசோதனை முயற்சியில் ஈடுபடும் ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி மையம், வரும் டிசம்பர் மாதம் ஜப்பானிய செல்வந்தர் யுஸாகா மசாவாவை விண்வெளி சுற்றுலாவுக்கு அனுப்புகிறது.

அதே சமயத்தில் உலகத் திரைப்பட வரலாற்றில் இல்லாத அளவு முதன்முறையாக விண்வெளியில் படமாக்கப்பட்ட இந்த ஆவணப் படத்தையும் தயாரித்து வெளியிட உள்ளது. இதேபோல ரஷ்யா தொடர்ந்து விண்வெளி பரிசோதனை முயற்சியில்

# வெளியேறினார் பெலராஸில் உள்ள பிரான்ஸ் தூதர் !



பெலராஸில் உள்ள பிரான்ஸ் தூதர் நிகோலஸ் டி லாகோஸ்டே நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மின்ஸ்கில் உள்ள அதிகாரிகள் திங்கட் கிழமைக்குள் வெளியேறுமாறு கோரியமையை அடுத்து பெலாரஸுக்கான பிரான்ஸ் தூதர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டை விட்டு வெளியேறினார் என தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ் அறிவிப்பை வெளியிட்ட தூதரக செய்தி தொடர்பாளர், பெலாரஷ்ய அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறக் கோருகின்றமை ஏன் என்று கூறவில்லை.

ஆனால், நிகோலஸ் டி லாகோஸ்டே தன் விபரங்களை ஜனாதிபதி லூகான்கோவிடம் காண்பிக்க மறுத்ததாக உள்ளூர் ஊடகங்களில் கூறப்படுகிறது. இதனாலேயே அவர் வெளியேற்றப்பட்டிருக்கிறார் என ஒரு தரப்பு கூறுகின்றது.

இதேவேளை, பெலாரஷ்ய வெளியுறவு அமைச்சகம் ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு முன்னர் தூதர் வெளியேற வேண்டும் என்று கோரியது' என்று தூதரக செய்தித் தொடர்பாளர் கூறினார். 57 வயதான லாகோஸ்டே கடந்த ஆண்டு தான் அந்நாட்டில் தூதராக பணியமர்த்தப்பட்டார்.

எவ்வாறாயினும், கடந்த ஆண்டு ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான அதன் இணைத் தலைவர் ஆண்ட்ரி டிமிட்ரிவ் உட்பட சமீபத்தில் தடை செய்யப்பட்ட அரச சாரா நிறுவனமான கோவோரி பிராவ்துவுன் பிரதிநிதிகளுக்கு லாகோஸ்ட் புதன் கிழமை விருந்தளித்தார் எனத் தூதரகம் தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டிருந்தது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலில், அலெக்சாண்டர் லூகான்கோ மீண்டும் வெற்றி பெற்றதால் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்கும் பெலாரஸுக்கும் இடையே யான உறவுகள் மிகவும் மோசமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது



# மியன்மார் இராணுவத் தளபதி உச்சிமாநாட்டில் இருந்து நீக்கம்

இந்தமாத இறுதியில் நடைபெறவுள்ள பிராந்தியத் தலைவர்களின் வருடாந்த உச்சிமாநாட்டிலிருந்து மியன்மாரின் இராணுவத் தளபதி நீக்கப்பட்டுள்ளார்.

தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் அவருக்கு பதிலாக மியன்மாரில் அரசியல் சார்பற்ற பிரதிநிதி ஒருவரை உச்சி மாநாட்டில் இணைத்துக்கொள்ள இணங்கியுள்ளது.

மியன்மாரின் அதிகாரத்தை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ள நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஆஸ்திரேலியாவில் 104 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஹெரோயின் மீட்பு

ஆஸ்திரேலிய வரலாற்றில் முதற்தடவையாக பாரிய தொகை ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

செப்ரெம்பர் 29 அன்று ஆஸ்திரேலியாவின் மிகப் பெரிய மெல்போர்ன் துறைமுகத்தில் வைத்து இந்தக் ஹெரோயின் தொகையாக கைப்பற்றப்பட்டுள்ளது. டைல்ஸ்களுடனான கொள் கலன் ஒன்றில் குறித்த ஹெரோயின் தொகை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர், மலேஷிய பிரஜை கைது செய்யப்பட்டுள்ள தாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதன்போது 450 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவற்றின் பெறுமதி 1 / 04 மில்லியன் அமெரிக்க டொலராகும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



# பாக்தாத் முதல் கோராசான் வரை தாக்குதல் தொடரும்; ஐ.எஸ்.எச்சரிக்கை!



பாக்தாத் முதல் கோராசான் வரை தாக்குதல் தொடரும் என ஐ.எஸ். அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஷியா முஸ்லிம்களுக்கு எதிராக ஐ.எஸ். அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

'ஷியா முஸ்லிம்கள் எங்கும் தாக்குதலுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

பாக்தாத் முதல் கோராசான் வரை இந்தத் தாக்குதல் தொடரும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆப்கானிஸ்தானில் உள்ள ஷியா முஸ்லிம்கள் தாக்குதலுக்கு உள்ளாவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக்கைப்பற்றியதிலிருந்துஐ.எஸ்.அமைப்பின் தாக்குதல்கள் அங்கு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சமீபத்திய வாரங்களில் அங்கு நிகழ்த்தப்பட்ட இருதற்கொலைப்படைத்தாக்குதல்களில் 100இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலுள்ள கைதிகளை விடுவிக்க தமிழக அரசு முடிவு



பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிறை வாசம் அனுபவிக்கும் ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிப்பதற்கான பட்டியல் 20 நாள்களில் தயாரிக் கப்படும் என தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

திருச்சி மத்திய சிறைச்சாலையில் தமிழக அமைச்சர்களான ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் கைதிகள் தொடர்பாக ஆய்வு செய்தனர். அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ரகுபதி, 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் உள்ள 700 ஆயுள் தண்டனைக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார் எனவும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என அவர் தெரிவித்தார். கைதிகளின் பெயர்ப் பட்டியல் 20 நாள்களில் தயாரிக்கப்படும் என்றும் தேசத்துரோகம், குண்டு வெடிப்பு போன்ற கொடுங்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இதில் அடங்கமாட்டார்கள் எனவும் அமைச்சர் ரகுபதி தெரிவித்திருக்கிறார். ராஜீவ்காந்தி கொலைவழக்கில் சிறையிலுள்ள ஏழு தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதில் முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார். அதை அவரது இலட்சியமாக வைத்துள்ளார். அவர்களை விடுதலை செய்யத் தமிழக அரசு முழு முயற்சி எடுக்கும். ஏழு பேரில் ரவிசந்திரன் என்பவரது தாயார் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளமையால் அவருக்கு பிணை வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கலந்து பேசி பரிசீலனை செய்யப்படும் என்றும் அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

# சுதந்திரம் போராட்ட வீரர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை

அந்தமானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தலைநகர் போர்ட்பிளேரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

பின்னர் அந்த நிகழ்ச்சியில் அவர் உரையாற்றும்போது, 'தேசப்பற்று மிக்க விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, இந்தத் தீவுகள் முக்கிய இடமாக விளங்கியிருக்கின்றன. 1943 இல் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இங்கேதான் மூவர்ணக் கொடியை முதன் முதலாக ஏற்றினார். அத்துடன், 1945 வரை 2 ஆண்டுகளுக்கு ஆங்கிலேய அரசிடம் இருந்து இந்த மண்ணை அவர் பாதுகாத்தார். ஆனாலும், நேதாஜியோ அல்லது விடுதலைக்குப் பின் நாட்டை ஒருங்கிணைத்த சர்தார் வல்லபாய் பட்டேலோ, பல ஆண்டுகளாக உரிய அங்கீகாரமோ, மரியாதையோ, முக்கியத்துவமோ பெறவில்லை. புகழ்பெற்ற சில விடுதலைப் போராட்ட வீரர்களையும் அவர்களது பங்களிப்பையும் வேண்டுமென்றே சிறுமைப்படுத்தும் முயற்சிகள் நடந்தன. ஆனால், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான பாரதிய ஜனதா அரசு, குஜராத்தில் சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலையை நிறுவியதுடன், நேதாஜியின் பிறந்த தினத்தை 'வெற்றித் தினம்' ஆகவும் அறிவித்தது' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.








# கல்வெட்டில் பெயர் பதித்தால் பொதுச் செயலாளர் ஆக முடியுமா?

அ.தி.மு.க.வின் பொன்விழாவையொட்டி கட்சிக்கொடியை சசிகலா ஏற்றியதும், அவரது பெயர் கல்வெட்டில் பொறிக்கப்பட்டு வைக்கப்பட்டமையும் கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்தியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அ.தி.மு.கவின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார் சென்னையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது, நீதிமன்றம் நாங்கள்தான் உண்மையான அ.தி.மு.க. என்று கூறியுள்ளது. சசிகலா செயற்பட்டமை நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிரானது. மீசை வைத்தவரெல்லாம் கட்டபொம்மன் ஆகிவிடமுடியாது. சசிகலா என்ன தியாகம் செய்தார் தியாகத்தலைவி என பெயர் சூட்டிக்கொள்ள? பெங்களூர் சிறையிலிருந்து வந்த பிறகு அவர் ஏன் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நினைவிடத்துக்கு வந்து மரியாதை செலுத்தவில்லை. பொன்விழா ஒற்றுமையுடன் கொண்டாடப்படுவது அவருக்குப் பிடிக்கவில்லை.

சசிகலாவால்தான் 1996ஆம் ஆண்டு அ.தி.மு.க. தோல்வியடைந்தது. வானத்திலிருந்து குதித்த அவதாரம்போல நான்தான் புரட்சித்தாய் என்று அவர் சொல்கின்றமை எப்படி ஏற்க முடியும்? ஜெயலலிதாவைத் தவிர யாரும் புரட்சியைச் சொந்தம் கொண்டாட முடியாது. சசிகலா கட்சிக்காக எந்தப் புரட்சியும் செய்யவில்லை. எந்தக் காலத்திலும் சசிகலாவை யாரும் ஏற்க மாட்டார்கள். ஜெயலலிதா மட்டும்தான் கட்சி யின் நிரந்தரப் பொதுச்செயலாளர். அவரைத் தவிர யாரும் பொதுச் செயலாளராக முடியாது.

உள்ளாட்சித்தேர்தலை பொறுத்தவரை மாநிலத்தேர்தல் ஆணையத்தை கைப்பாவையாக வைத்து தி.மு.க. தேர்தலை நடத்தியுள்ளது" என்று தெரிவித்திருக்கிறார்.

# இந்தியாவின் மத்தியப் பிரதேச பல்கலையில் கால்நடைகளுக்கான 'சொக்லேட்' கண்டுபிடிப்பு



ஆடு, மாடுகள் ருசித்துச் சாப்பிடக்கூடிய சொக்லேட்டை இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம், ஜபல்பூரில் உள்ள நானாஜி தேஷ்முக் கால்நடை அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுபற்றி அந்தப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.பி.திவாரி கூறும்போது, பல்வேறு விற்றமின்கள், தாதுக்கள் நிறைந்த சொக்லேட், கால்நடைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. பசுந்தீவனம் கிடைக்காதபோது இதை கால்நடைகளுக்கு மாற்றுத் தீவனமாகவும் பயன்படுத்தலாம். மாநில கால்நடை பராமரிப்புத்துறையின் உதவியுடன் இந்த சொக்லேட்டுகள் மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்படும் என்று தெரிவித்தார்.

கால்நடை அறிவியல் பட்டதாரிகள் இந்த சொக்லேட் தயாரிக்கும் புதிய ஆலைகளை ஆரம்பிப்பதற்கு வசதியாகத் தயாரிப்புத் தொழில்நுட்பமும் அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சொக்லேட்டை கால்நடைகள் உணவாக்கிக்கொள்ளும்போது, அவற்றின் பால் உற்பத்தி அதிகரிக்கும், கருத்தரிக்கும் வாய்ப்பு அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சொக்லேட்டை கால்நடைகளுக்கு தனியாகவோ, பிற தீவனங்களுடன் சேர்த்தோ கொடுக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கால்நடைத் தீவனத் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்ற கடுகு புண்ணாக்கு, அரிசித் தவிடு, வெல்லப்பாகு, மாப்பொருள், உப்பு போன்ற பல பொருள்களையும் கொண்டு தயாரிக்கப்படுகிற 500 கிராம் எடையுள்ள கால்நடை சொக்லேட் ஒன்றின் விலை 25 ரூபா என்று கூறப்படுகிறது. விரைவில் இந்த சொக்லேட் சந்தைக்கு விற்பனைக்கு வர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒருவாரத்தில் 100 கோடி டோஸ் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுவிடுமென அமைச்சர் தகவல்



இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

தினமும் லட்சக்கணக்கானோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை கிடைத்த தரவுகளின்படி இந்தியாவில் 97ஆயிரத்து 25கோடிடோஸ்கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

இந்தியத்தலைநகர் டெல்லியில் நடந்த விழாவொன்றில் கலந்துகொண்ட மத்திய சுகாதார ரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாகத் தொடர்வதால் மக்களுக்கு செலுத்தப்படும் தடுப்பூசி டோஸ்களின் மொத்த எண்ணிக்கை ஒருவாரத்தில் 100 கோடியைக் கடக்கும் எனத் தெரிவித்திருக்கிறார். 100 கோடி தடுப்பூசி என்ற இலக்கை இந்தியா எட்டியதும் ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், விமான நிலையங்கள் போன்ற முக்கிய மையங்களில் அதுதொடர்பாக அறிவிப்பு வெளியிடப்படும் என அமைசமசர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 588 பாடசாலைகள் மாத்திரமே கிழக்கில் 21ஆம் திகதி திறப்பு!



கொவிட் தொற்றால் மூடப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தில் 200மாணவர்களுக்குக் குறைவாக உள்ள ஆரம்ப வகுப்புகளைக்கொண்ட 588பாடசாலைகள் மட்டுமே எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கப்பட ஏற்பாடுகள் பூர்த்தி செய்துள்ளதாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளைநாயகம் தெரிவித்துள்ளார்.

மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் திறக்கப்படும் என்ற செய்தியில் உண்மையில்லை. மாறாக மாகாணத்திலுள்ள வகை 3 ஐச் சேர்ந்த 346 பாடசாலைகளும் ,ஏனைய வகை 2 ,1சி, 1ஏபி வகை பாடசாலைகளில் 200 மாணவர்களுக்குக் குறைவாக உள்ள ஆரம்ப பிரிவைக்கொண்ட 242 பாடசாலைகளுமாக, மொத்தம் 588பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன.

200மாணவர்களை விடக்கூடுதலான மாணவர்களைக்கொண்ட ஆரம்பப்பிரிவை உடைய பாடசாலைகள் 21ஆம் திகதி திறக்கப்படமாட்டா.

இன்று திங்கட்கிழமை அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பமாகின்றன. கொவிட் தடுப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட பதாதைகள் துண்டுப் பிரசுரங்கள் செய்திக் குறிப்புகள் அனைத்தும் இன்று மாகாணத்திலுள்ள சகல வலயங்களுக்கும் கையளிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் :-

வார இறுதியில் பாடசாலை திறப்பது தொடர்பான பொது அறிவித்தல் அந்தந்த கோட்டவாரியாக பொது இடங்களில் ஒலிபரப்பப்படவுள்ளது. இந்தவாரம் பாடசாலைகளை சுத்தப்படுத்தல் உள்ளிட்ட தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் -19 சூழ்நிலை காரணமாக ஒன்றரை வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளை பகுதியளவில் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான சகல வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளதாகக் கல்வியமைச்சு தெரிவித்திருந்தது. இதற்காக கல்வியமைச்சும் சுகாதார அமைச்சும் இணைந்து வேலைத்திட்டங்களை வகுத்துள்ளன.

முதலிருவாரங்களில் மாணவர்களுக்கு சுதந்திரமாக இயல்புநிலைக்கு திரும்புவதற்கேற்றவிதமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.கற்பித்தல் என்று பெரிதாக எதுவும் இடம்பெறாதவகையில் ஏனைய புறக்கிருத்தியசெயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மாணவர் அனுமதிக்கப்படுவர்.

இதற்காக ஆரம்பநெறி மாணவர்களுக்கென எமது மாகாண கல்வித்திணைக்களம் 10வகையான போட்டிகளை அறிமுகப்படுத்தவுள்ளது. பேச்சு கட்டுரை சித்திரம் போன்ற 10வகையான துறைகளில் இலகுமுறைப் போட்டிகள் முதலிருவாரங்களில் நடத்தப்படவிருக்கின்றன. அதற்கான ஆயத்தங்களையும் இக்காலப்பகுதியில் ஆசிரியர்கள் மேற்கொள்ளமுடியும்.

அதேவேளை, ஆரம்பநெறி ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சியளிப்பதற்கான வளவார் களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் இந்தவாரத்தில் ஆரம்பநெறி ஆசிரியர்களுக்கு மாணவர்களை கொவிட் நெருக்கடியிலிருந்து கற்றல் நிலைமைக்கு திருப்புவதற்கான பயிற்சிகளை அளிப்பார்கள்.

ஆரம்பத்தில் அதாவது முதலிருவாரங்களில் சீருடை அவசியமில்லை அதேவேளை முழுமையான கற்பித்தல் நடைபெறமாட்டாது.

கிழக்கில் இதுவரை 98வீதமாக அதிபர்களும் ஆசிரியர்களும் கல்விசாரா ஊழியர்களும் தடுப்பூசி போட்டுள்ளார்கள். எனினும் தடுப்பூசி போடாத எந்த ஆசிரியரும் வகுப்பறைக்குள் நுழையமுடியாது.

**சிரமதானப் பணிகள்**

கிழக்கு மாகாணத்தில் உள்ள 588பாடசாலைகள்எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், அனைத்து பாடசாலைகளிலும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும், பாடசாலைகளில் குடிதண்ணீர் வசதி சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் போன்ற நடைமுறைகளை பேணுவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காகப் போதுமான நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பாடசாலைக்கு மாணவர்கள் இரண்டு வாரங்களுக்கு சீருடை அவசியமில்லை எனவும்சாதாரண உடையில் சமுகமளிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்காமல் இணைப்பாடவிதான செயற்பாடுகள் முன்னெடுக்குமாறு அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும் மாணவர்களின் உடல் வெப்பநிலையை அறிவதற்கு உடல் வெப்பமானியும் இதன்போது பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டதுடன் ஆரம்பிக்கப்படும் பாடசாலை தொடர்ந்து மூடாமல் இருப்பதற்கு ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் பெற்றோர்களின் முழு ஒத்துழைப்புடன் பாடசாலையை முற்று முழுதாக சிரமதானம் செய்து சிறந்த முறையில் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இதன்போது கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்கள் தொழிற்சங்கப்போராட்டம் என்று ஏதாவது சமுகமளிப்பின்மை இடம்பெற்றால் அதனை எதிர்கொள்ளும் முகமாக பிரதேச செயலகங்களிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவையைப் பெறுகின்றமை தொடர்பாகவும் ஆளுநர் மட்டத்தில் கலந்துரை யாடப்பட்டிருக்கிறது. எது எப்படியோ 21ஆம்திகதிபாடசாலைகள்திறக்கப்படுகின்றமை உறுதியாகிவிட்டது என்றார்.




# பாதுகாப்பு கடவை அமைக்கக் கோரி ரயில் பாதையில் கவனவீர்ப்பு போராட்டம்

மட்டக்களப்பு – கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பறங்கியாமடு ரயில் பாதையில் பாதுகாப்பு கடவை அமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையுடன் தமது வழமையான வீதிப் போக்குவ ரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையை கண்டித்தும் போக்குவரத்துக்கு விடுமாறு கோரி பிரதேச மக்களால் கவனவீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பிரதேச ரயில் கடவை பாதையில் ஒன்று கூடியவர்கள் கையில் சுலோகங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ரயில் கடவையை அடைத்து வைத்து மக்களின் வயிற்றில் அடிக்காதே, ரயில் திணைக்கள அதிகாரிகளே, எமது மீன்பிடி வீதியை அடைத்து வைக்காமல் திறந்து விடவும், எமது வழமையான பாதையைத் திறந்து விடவும் என்பன போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியிருந்தனர்.

பறங்கியாமடு மீனவர் கிராம மக்கள் தமது போக்கு வரத்தை வழமையான கடற்கரை வீதியால் ரயில் பாதை யின் குறுக்காக கடந்து மேற்கொண்டு வந்திருந்தனர்.

கிரான், சந்திவெளி, முறக்கொட்டான்சேனை மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்தோர்கள், வியாயபாரிகள் என பலரும் தமது கடற்றொழில் சார்ந்த நடவடிக்கையில் ஈடுபட இந்த வீதியை பயன்படுத்தினர்.

குறித்த பாதை கடற்கரைக்கு செல்வதற்கு குறுகிய தூரமாக காணப்பட்டதால்போக்குவரத்துக்கு இலகுவாக காணப்பட்டது. தற்போது 5 கிலோமீற்றர் தூரம் சுற்றி செல்ல வேண்டிய நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டக் காரர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் , நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் போன்றோர்களிடம் தெரிவித்த போதிலும் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டு தீர்வு பெற்றுத் தருவதாக கூறிச் சென்றுள்ளனர். இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை என்றும் போராட்டக் காரர்கள் தெரிவித்துள்ளனர். எனவே ரயில் வீதியை போக்குவரத்துக்கு ஏற்றால் போல் மாற்றி அமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பறங்கியாமடு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# விவசாயிகளின் தற்கால பிரச்சினைக்கு தீர்வுகோரி மட்டக்களப்பில் போராட்டம்

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பசளையின்றி சிரமங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் மட்டக்களப்பில் உள்ள இராஜாங்க அமைச்சரும்,மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் மெளனமாக இருக்கிறார் எனவும் தங்களுக்கான பசளையைப்பெற்றுக் கொள்ள அனைவரும் நடவடிக்கையெடுக்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச்சோலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. உரம் இன்றி உழவு இல்லை விவசாயிகளின் தற்கால பிரச்சினைக்கு தீர்வுகோரி கண்டனப் போராட்டம் மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரி வுக்குட் பட்ட கொக்கட்டிச்சோலை யில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட் டக்களப்பில் இன்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

இந்த கண்டன போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்,முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மா.நடராஜா,பிரதேசசபையின் தவிசாளர் நா.புஸ்பலிங்கம் உட்பட பிரதேசசபை உறுப்பினர் கள்,விவசாய அமைப்புகளின்பிரதிநிதிகள்எனப்பலர்கலந்துகொண்டனர்.

முடக்காதே முடக்காதே எமது விவசாயத்தை முடக்காதே,அழிக்காதே அழிக்காதே எமது பொருளாதாரத்தை அழிக்காதே,திடீர் சேதனம் விவசாயத்தை முடக்கும் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர். கொக்கட்டிச்சோலை சந்தியிலிருந்து பேரணியாக வந்து கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.





# பந்துல காலமானார்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான பந்துல வர்ணபுர தனது 69 ஆவது வயதில் காலமானார். உடலில் சீனியின் அளவு அதீதமாக அதிகரித்தமை தொடர்பான பிரச்சினைகளுக்கு கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவரது உயிர் பிரிந்திருக்கிறது என செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டபோது 1982 இல் கொழும்பு பி.சரவணமுத்து (பி.சரா ஓவல்) மைதானத்தில் இங்கிலாந்து அணியோடு இலங்கை விளையாடிய முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கைத் தேசிய கிரிக்கெட் அணியின் தலைவராகச் செயற்பட்டவர் வர்ணபுர என்பது குறிப்பிடத்தக்கது.

# ரி-20 உலகக் கிண்ண முதல் போட்டியில் ஓமான் அணி 10 விக்கெட்டுகளால் வெற்றி

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் தகுதிகாண் சுற்றின் முதல் போட்டியில் பப்புவா நியூ கினியா அணியை ஓமான் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

ஐக்கிய அரபு இராச்சியத்திலும் ஓமானிலும் நடைபெறும் 16 நாடுகள் பங்குபற்றுகின்ற ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நேற்று ஆரம்பமானது.

ஆரம்பப் போட்டியில் ஓமான், பப்புவா நியூ கினியா அணிகள் மோதியிருந்தன. போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஓமான் அணி முதலில் களத்தடுப்பிலீடுபடத் தீர்மானித்தது.



முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பப்புவா நியூகினியா அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை எடுத்தது. அணித்தலைவர் அசாத் வாலா 56 ஓட்டங்களையும், சார்ள்ஸ் அமினி 37 ஓட்டங்களையும் சேர்த்தனர். ஓமான் அணியின் ஸீஸான் மகூட் 4 விக்கெட்டுகளையும், பிலால் கான், கலீமுல்லா இருவரும் தலா இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதையடுத்து 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஓமான் அணி 13.4 ஓவர்களில் விக்கெட் எதனையும் இழக்காமலே வெற்றியிலக்கையடைந்தது. அகிப் இல்யாஸ், ஜதிந்தர் சிங் இருவரும் ஆட்டமிழக்காது முறையே 50, 73 ஓட்டங்களை எடுத்திருந்தனர். போட்டியின் ஆட்டநாயகன் விருது பந்துவீச்சில் சிறப்பாகத் தனது திறமையை வெளிப்படுத்தியிருந்த ஓமான் அணித்தலைவர் ஸீஸான் மகூட்டுக்கு வழங்கப்பட்டது.

ஓமான் அணி தனது இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் அணியையும், பப்புவாநியூகினியா அணிஸ்கொட்லாந்து அணியையும் சந்திக்கவுள்ளன.



# பங்களாதேஷைப் பணியவைத்தது ஸ்கொட்லாந்து கிரிக்கெட் அணி

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்கொண்ட ஸ்கொட்லாந்து அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பைத் தேர்வுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஸ்கொட்லாந்து அணி, பங்களாதேஷ் வீரர்களின் சுழல்பந்துவீச்சில் விரைவாக ஓட்டங்களைப் பெறமுடியாது தடுமாறினர். இறுதியில், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களை அந்த அணி பெற்றுக் கொண்டது. க்றிஸ் க்றீவ்ஸ் 45 ஓட்டங்களையும், ஜோர்ஜ் முன்சே 29 ஓட்டங்களையும் எடுத்தனர். பங்களாதேஷ் அணியின் மஹெதி ஹஸன் 3 விக்கெட்டுகளையும், சகிப் அல் ஹஸன், முஷ்தபிசுர் ரஹ்மான் இருவரும் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பங்களாதேஷ் அணியும் ஓட்டங்களை எடுக்கச் சிரமப்பட்டதோடு விக்கெட்டுகளையும் அடுத்தடுத்து இழந்து தடுமாறியது. இறுதியில், 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களை மாத்திரம் எடுத்த அந்த அணி, 6 ஓட்டங்களால் ஸ்கொட்லாந்திடம் தோல்வியடைந்தது.

முஷ்பிகூர் ரஹீம் 38, மஹமதுல்லா 23 ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர். ஸ்கொட்லாந்து அணியின் பிரட் வேல் 3 விக்கெட்டுகளையும், க்றிஸ் க்ரேவ்ஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக க்றிஸ் க்ரேவ்ஸ் தெரிவானார்.

பங்களாதேஷ் அணி இதற்கு முதல் 2012 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து அணிக்கு எதிராக ஒரேயொரு ரி-20 போட்டியில் விளையாடியுள்ளது. அந்தப் போட்டியிலும் அந்த அணி தோல்வியடைந்துள்ளது. எனவே, இது ஸ்கொட்லாந்துக்கு எதிரான பங்களாதேஷின் இரண்டாவது ரி-20 தோல்வியாக அமைந்துள்ளது. சுப்பர் 12 சுற்றுக்குத் தகுதிபெறுவதற்கான புள்ளிப்பட்டியலில், பி குழுவின் முதலிடத்தை 2 புள்ளிகளுடன் ஓமான் அணி தக்கவைத்துள்ளதோடு, ஸ்கொட்லாந்து அணி அதே 2 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. பங்களாதேஷ் அணி மூன்றாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

# சென்னை அணியின் முதல் வீரராக எம்.எஸ்.டோனி தக்கவைக்கப்பட்டார்!




அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டித் தொடருக்கான ஏலத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முதல் வீரராக எம்.எஸ்.டோனி தக்கவைக்கப்பட்டுள்ளதாக அந்த அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 15 ஆவது ஐ.பி.எல். தொடரில் கூடுதலாக இருஅணிகள்பங்கேற்கின்றன. இதனால், இந்த வருட இறுதியில் வீரர்களுக்கான ஏலம் நடைபெறப்போகிறது.

ஒவ்வொரு அணியும் 3 வீரர்கள் வரை தக்க வைத்துக்கொள்ளலாம் என்ற வரையறையின் கீழாக, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முதல் வீரராக எம்.எஸ்.டோனி தக்கவைக்கப்பட்டுள்ளார் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் தக்கவைக்கப்பட்டதன் மூலம் டோனி அடுத்த ஆண்டும் அந்த அணியில் விளையாடுவார் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வருடத்துக்கான ஐ.பி.எல்.தொடரிலும் சென்னை அணிக்குத் தலைமைதாங்கிய டோனி நான்காவது தடவையாக சம்பியன் கிண்ணத்தை வென்றுகொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை சீண்டி அரசியல் ஆதரவு கேட்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி

## மறவன்புலவு சச்சி இப்படிக் கருத்து

இந்தியாவைச் சீண்டியவாறே இந்தியாவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசியல் ஆதரவு கேட்பதாக மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

வட கடல் என்கின்ற பாக்குநீரிணை, தென்கடல் என்கின்ற மன்னார் வளைகுடா, இரண்டையும் சரிசமமாகக் கிழித்துக்கொண்டு நடுவே ஓடுவதே கற்பனையான இலங்கை இந்திய அனைத்துலக எல்லைக்கோடு. 1976 இற்கு முன்னர் இத்தைகைய எல்லைக் கோடு இருந்ததே கிடையாது.

தமிழக மீனவர்கள் வட கடலில் எல்லைக் கோட்டைத் தாண்டி வருகிறார்கள் என்பது உலகில் இல்லாத வியப்பு நிகழ்வா?

உலகெங்கும் பல்வேறு இடங்களில் இத்தகைய உள்ளகக் கடல்கள் உள்ளன. அவற்றை ஊடறுத்துச் செல்லும் அனைத்துலக எல்லைக் கோடுகளும் உள்ளன.

இத்தகைய உள்ளகக் கடல் எல்லைகள் அனைத்துலக உடன்பாடுகளுள் அடங்கா சிறப்பாக சில ஆண்டுகளுக்கு முந்தைய கராக்காசு அனைத்துலக கடல்வள உடன்பாட்டுக்குள் வட கடல் அடங்காது தென் கடலின் தெற்குப்பகுதி வரக் கூடும்.

இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் புகுந்து மீன் பிடிக்கின்றமை வழமை.

இந்திய கன்னியாகுமரிக்குத் தெற்கே உள்ள குமரிப் பரப்பில் இலங்கை மீனவர்கள் வளங்களை அள்ளுவதைப் பார்த்துக் கொண்டு தமிழகக் குமரி மாவட்ட மீனவர்கள் கண்டும் காணாதமை போல விடுகிறார்கள்.

திருகோணமலையில் நங்கூரமிட்டு பல நாள்,மீன் பிடி வள்ள மீனவர் கிழக்கே அந்தமான் தீவுகள் தொடக்கம் மேற்கே விசாகப்பட்டினம் வரை சென்று மீன் பிடித்து வருகின்றனர். என்றாலும் இந்தியக் கடலோர காவல்படை கண்டு கொள்வதே இல்லை.

தென் கடலில் தூத்துக்குடி வரை கற்பிட்டிமீனவர்கள்சென்றுவருகின்றமை வழமை. எப்போதோ ஒருமுறை இந்தியக் கடலோர காவல்படை தலையிட்டு அவர்களை மதுரை நீதிமன்றம் முன்பு நிறுத்தினர்.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே 22 கிலோ மீற்றர் தொலைவு.

இயந்திர வள்ளம் ஒன்றை முடக்கிய அரைமணி நேரத்தில் தலைமன்னார் மீனவர் தனுஷ்கோடிக் கடலிலுள் சென்று விடுவார். மாதகல் – கோடிக்கரைக் கடல் தொலைவும் அத்தகையதே.

15 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக மீனவர் உயிரைக் கையில் பிடித்தவாறு எல்லை தாண்டி வந்ததாலேயே போராட்டம் தொடர்ந்தது.

போராட்ட காலத்தில் வடக்கின் மீது திணித்த பொருளாதாரத் தடைகளை முறியடிக்க உதவியவர்கள் தமிழக மீனவரே.

நல்லாட்சிக் காலத்தில் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சுமந்திரன் 21 ஏப்பிரல் 2015இல் முன்மொழிந்திருந்தார்.

Indian trawlers have continued to enter Sri Lankan waters and exploit our resources. ..............Foreign fishermen fishing in our water has caused great distress to our fishermen especially those living in the north, M.A. Sumanthiran stated regarding the issue................. The offender will be sentenced to a two‡year prison term and will have to pay a fine of Rs. 50,000. இரண்டாவது வாசிப்பு வரை அச்சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் வந்தது. அந்த சட்ட மூல வரிகளைப் படித்ததும் நான் அதிர்ந்தேன். தமிழர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் தொப்புள்கொடி உறவுகளுக்கு அவர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் சட்டமூலத்தைக் கொண்டு வருகிறாரே என நான் வருந்தினேன்.

என் அருமைத் தம்பி சித்தார்த்தனிடம் சொன்னேன். சுமந்திரனைக்கட்டுப்படுத்த முடியாது எனச் சித்தார்த்தன் என்னிடம் சொன்னார். என் அருமைத் தம்பி மாவை சேனாதிராசாவிடம் சொன்னேன் அவ்வாறான ஒரு சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் வந்ததா என மாவை சேனாதிராசா என்னிடம் கேட்டார்.

நான் சட்ட மூலத்தின் வரிகளைக் காட்டினேன். தமிழரின் அரசியல் எதிர்காலத்துக்குத் தீங்காக அமையுமே என்றேன்.

மாவை சேனாதிராசா நடவடிக்கை எடுத்தார் போலும்! நாடாளுமன்றத்தில் பின்னர் அந்தச் சட்டமூலத்தைச் சுமந்திரன் முன்னெடுக்கவில்லை.

அதே சட்ட மூலத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து சட்டமாக்கினார்.

எல்லை தாண்டும் இந்திய மீனவரைச் சுட்டுக் கொல்வோம் என்றார், தமிழரசின் ஆதரவுடன் நல்லாட்சியாளர் பிரதமர் ரணில். அந்தச் சட்டத்தையே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைவிட்டுள்ளார் எனச் சுமந்திரன் முறையிடுகிறார்.

எந்த மீனவர் எம்மைக் காத்தார்களோ, எந்த நாடு எம்மவர் மூன்று லட்சம் பேருக்குப் புகலிடம் கொடுத்துள்ளதோ, அந்த மீனவருக்கு அந்த நாட்டுக்கு எதிராகப் போராட்டக் களத்தில் தமிழரசுக் கட்சி!

எந்த முகத்தோடு பாரதம் இலங்கைத் தமிழருக்கு உதவவேண்டும் எனத் தமிழரசுக் கட்சியினர் இந்தியாவைக் கேட்பார்கள்? இந்தியாவைச் சீண்டியவாறே, இந்தியாவிடம் அரசியல் ஆதரவு கேட்கிறதே தமிழரசுக் கட்சி.

சுமந்திரனை அறிவோம். இந்தியாவுக்கு எதிரானவர் என்பதையும் அறிவோம். டில்லியில் என்னிடமும் மட்டக்களப்பு யோகேஸ்வரனிடமும் கூறியவர் தமிழரல்லாத பாரதீய ஜனதாக் கட்சி மேலிடத்தார்.

சுமந்திரனை ஏன் இன்னமும் வைத்திருக்கிறீர்கள்? தமிழரசுக் கட்சி சார்பில் சென்னையில் தமிழக பாரதீய ஜனதாக் கட்சியைச் சந்தித்த சத்தியலிங்கத்திடமும் குகதாசனிடமும் கேட்டனர், தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள்.

மாவை சேனாதிராசாவையும் சிறீதரனையும் சாணக்கியனையும் அந்தப் பட்டியலில் இந்திய அரசியல்வாதிகளும் ஆட்சியாளரும் இன்று முதலாகச் சேர்த்துக் கொள்வர்.

முதுகில் குத்துவதும் அதே நேரத்தில் ஆதரவு கேட்பதும் ஈழத் தமிழரின் இயல்பு என இந்திய அரசியலாளரும் ஆட்சியாளரும் என்னிடம் பலமுறை கூறுவர் என க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

## புதிய கொரோனா வகைகள் நாட்டுக்குள் நுழையும் அபாயம்!

### விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

இலங்கைக்குள் புதிய கொவிட் தொற்று வகைகள் நுழைவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்காக நாடு திறக்கப்படுவதாலும், துறைமுகங்கள் மீண்டும் செயற்படுவதாலும், புதிய கொவிட் வகைகள் நாட்டுக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குனவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, இவ்வாறான சந்தர்ப்பத்தில் தங்களை பாதுகாத்துக் கொள்ள சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் கடைபிடிக்குமாறு பொது மக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நிருபமா ராஜபக்ஷவின் சொத்துவிவரங்களை வெளியிடுமாறு ட்ரான்ஸ்பேரன்ஸி கோரிக்கை!

பண்டேரா பேப்பர்ஸ் சர்ச்சையில் சிக்கியுள்ள முன்னாள் பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் சொத்து விவரங்களை வெளிப்படுத்துமாறு ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு 3 தகவல் அறியும் உரிமை விண்ணப்பப்படிவங்களைத் தாக்கல் செய்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு, நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்துக்கே இவை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

1975 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடன சட்டத்துக்கு அமைவாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட பதவி வகிக்கும் அரச அதிகாரிகள் தமது வாழ்க்கைத் துணை மற்றும் அவரைச் சார்ந்துள்ள பிள்ளைகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் உள்ளடங்கலான சொத்து மற்றும் பொறுப்புக்களின் வருடாந்த பிரகடனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த விடயத்தில் பணத்தூயதாக்கல் இடம்பெற்றிருக்கக்கூடுமா என்பது தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நிதிக் குற்றவிசாரணைப் பிரிவுக்கும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

## கந்தளாயில் விவசாயிகள் கவனவீர்ப்புப் போராட்டம்




கந்தளாய் – தம்பலகாமம் மற்றும் கிண்ணியா பிரதேச விவசாயிகள் தங்களின் விவசாய செயற்பாடுகளுக்காக அரசாங்கம் விரைவில் இரசாயன உரத்தை பெற்றுத்தறுமாறு கோரி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

கந்தளாயிலுள்ள அனைத்து விவசாயிகளும், விவசாயச் சங்கங்களும் ஒன்றிணைந்து இந்த கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள்.

கந்தளாய் பேராத்துவெளி ஜும்மா பள்ளிவாசல் தொடக்கம் கந்தளாய் நகர் ஊடாக கந்தளாய் குளக்கட்டு வரையில் நடை பவனியூடாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஐந்நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் கலந்து கொண்டு விவசாயம் மேற்கொள்ள உரத்தைப் பெற்றுத்தா, அராஜக அரசியல் மற்றும் விவசா–யிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடு போன்ற சுலோகங்களை ஏந்தியிருந்தமையோடு,கொடும்பாவிகளும் எரித்து எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.10.2021இல் வெளியிடப்பெற்றது.